முருகப்பெருமான் துணை

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.08.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. மாதரும பலம் கொண்ட ஞானியே
மரணம் வெல்லும் சக்தியை
பூதலத்தில் அருளும் தவசியே
புகலுவேன் உன் பெருமை கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது யாளி திங்கள்
தெரிவிப்பேன் பஞ்சதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 05 நாள், 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனுக்கு மெய்ப்பொருள் நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வருபவர்க்கு
ஞான சித்தி உண்டெனக் கூறி
நம்பிக்கைபட ஜீவதயவுதனை காட்டும்
4. காட்டும் அரங்கனே தருமனே
கலியினில் உன்பதம் பற்றிட
வாட்டம் விலகி வறுமை விலகி
வருகின்ற மக்கள் மேன்மை அடைவர்
5. மேன்மை தரும் ஞான குருவேயென
மேலான உன் தரும வழிகள் தன்னை
நன்மை கருதி ஏற்ற மக்கள்
நம்பிக்கைபட தொடரும் மக்கள்
6. மக்களெல்லாம் ஞானவான் ஆவதுடன்
மாதருமவானும் ஆகி உலகினில்
தேக்கமின்றி வளர்ச்சி காண்பர்
தெய்வ நெறியால் மாற்றம் அடைவர்
7. அடையவே உயர் குணம் தேறி
அன்பே யாவும் எனும் நிலை
தடையறக் கண்டு தயவுபட
தரணியில் சேவையை ஆற்றி
8. ஆற்றியே உலகினில் தேறுவர்
ஆனந்தம் சத்சித் எனும்
ஆற்றல் கூறி தனை அறிந்து
அதனுள் குருவருள் இணைந்திட
9. இணைந்திட ஏகாந்த நிலையான
இணையிலா சோதி சுயத்தில்
இணைந்து கலந்து இனிபிறவா
ஈதூழே பெரும்பேறு காண்பர்

10. காண்கவே இந்தவித அற்புதம்
    கந்தனே கலியுகம் தன்னில்
    உண்மைபட அரங்கனை கொண்டு
    உலகினில் நடத்தி வருக
11. வருமுலகில் அறிந்து தெளிந்து
    வந்தவரெல்லாம் தேறுவர்
    முருகப்பெருமான் அருள் பெற்றுமே
    முழுமைகண்ட ஞானிகளாகுவர்

அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–